<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.31/2017</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜாமுகமது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.02.2026** |
| **பெயர்** | **சீனிவாசன்** |
| **த/பெ** | **வெங்கையா** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.01.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

7. இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் என் தந்தை தாக்கல் செய்தார். என் தந்தை தற்போது உயிருடன் இல்லை. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 20 செண்ட் நிலத்தை பட்டாவில் 18 செண்ட் என்று தவறுதலாக குறிப்பிட்டு இருந்ததால் தாக்கல் செய்தேன். 20 செண்ட் வாதிகளுக்கு உரிமையானது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 218/11. அதன் நான்கு எல்லைகள் தெற்கு பக்கம் என்னுடைய நிலம், வடக்கு பக்கம் மாரிரெட்டியார் இடம், கிழக்கு பக்கம் குமாரின் நிலம், மேற்கு பக்கம் நடராஜனின் நிலம். 20 செண்ட் நிலம் எனக்கு உரிமை இல்லை என்றும், 18 செண்ட் தான் உரிமை என்றால் சரியல்ல, 20 செண்ட் நிலமும் எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது.

**விசாரணை முடியும் நேரம். 12.07 p.m.**